ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1872/8- 2014 ජූලි මස 22 වැනි අඟහරුවාදා - 2014.07.22

1872/8 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல: காநா/4/5/கொள்ளல்/81.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/15/2012/வீஈ/284.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியின் உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கிறேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

காலி மாவட்டத்தில் கங்கபட பத்துவ வடக்கு - நாகொட பிரதேச செயலாளர் பிரிவில் 219 டீ அளுத்வத்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் இல. மு.கி.ப. 528, மேலதிக பத்திர இல. 89 - 92 இல் தயாரிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கீழே விபரிக்கப்படும் காணித்துண்டு தொடர்பானது:

**1. துண்டு இல. 1605:**

காணியின் பெயர்: நாக்கியாதெனிய வத்த; விபரம்: வீட்டுத்தோட்டம் நிரந்தர கட்டிடம் 5 உடைய கலப்பு விளைச்சல் நிலம் ஒன்று உள்ளது; உரிமை கோருபவர்: முகாமையாளர், வ/ய வட்டவள விளைச்சல் கம்பனி, கொழும்பு ; விஸ்தீரணம்: 2.0234 ஹெக்டயார்.

மேற் குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நாகொட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றி அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். திரிமான்ன,
பிரதேச செயலாளர்,
நாகொட.

பிரதேச செயலகம்,
நாகொட,
2014, யூன் 25.

8-280

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*